# பின்னணித் தகவல்கள்

**அட்டர்னி ஜெனரல்**
**அமைச்சகம்**

**சமூக பாதுகாப்பு மற்றும் சீரமைப்புச் சேவைகள்**
**அமைச்சகம்**

உடனடி வெளியீட்டுக்காக
டிசம்பர் 8, 2006

**வெறுப்புக் குற்றங்கள் தடுப்புக்கான சமூகப் பணிக்குழு அறிக்கை**

வெறுப்புக் குற்றங்கள் தடுப்புக்கான சமூகப் பணிக்குழு (Hate Crimes Community Working Group) என்பது அட்டர்னி ஜெனரல் மைக்கேல் பிரையன்ட் மற்றும் சமூக பாதுகாப்பு மற்றும் சீரமைப்புச் சேவைகள் அமைச்சர் மான்ட்டி க்வின்டர் ஆகியோரால் 2005 டிசம்பரில் நியமிக்கப்பட்டது. வெறுப்புக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவைகளை மேம்படுத்துவது, தனிநபர்கள் மற்றும் சமூகங்களைக் குறிவைக்கும் வெறுப்புக் குற்றங்களைக் குறைப்பது உள்பட மாகாணத்தில் வெறுப்புக் குற்றங்களை சமாளிப்பதற்கான அணுகுமுறைகளைப் பற்றி அமைச்சர்களுக்கு ஆலோசனை கூறுவது இக்குழுவுக்கு இடப்பட்ட பொறுப்பாகும்.

10 உறுப்பினர்கள் கொண்ட குழு, வெறுப்புக் குற்றங்களை சமாளிப்பதில் பரந்துபட்ட சமூகக் கருத்துகள், வல்லமை மற்றும் திறமைகளைக் கருத்தில் கொண்டது. பணிக்குழு, வெளியிடப்பட்ட ஆய்வறிக்கைகளை பரிசீலனை செய்தது; பகுதிவாரியான சமூக சந்திப்புகள் மற்றும் முனைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தியது; வெறுப்புக் குற்றங்கள் பிரச்சினையில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு மின்னணு வினாத்தாள்களை சுற்றறிக்கையாக அனுப்பியது; கல்வியாளர்கள், வழக்குரைஞர்கள், அரசு அலுவலர்கள், பாதிக்கப்பட்டோர் சேவை ஊழியர்கள், அரசு வழக்குரைஞர்கள், காவல்துறையினர் ஆசிரியர்கள் ஆகியோரை சந்தித்தது. அபராஜினல் பழங்குடியினர், ஆப்பிரிக்க கனடியர், யூதர்கள், இஸ்லாமியர், தெற்காசியர், கிழக்காசியர், தன்னினச் சேர்க்கை மகளிர்/தன்னினச் சேர்க்கை ஆடவர்/ஈரின ஈடுபாடு உடையவர்கள்/பால் மாற்றமடைந்தவர்கள்/அரவாணிகள் போன்ற வெறுப்புக் குற்றங்களுக்கு ஆளான பல குழுக்களின் பிரதிநிதிகளை இப்பணிக்குழு நேரடியாகக் கேட்டறிந்தது. ஆக மொத்தத்தில், இப்பிரச்சினையுடன் தொடர்புடையவர்கள் மற்றும் சமுதாய உறுப்பினர்களில் 600க்கும் மேற்பட்டவர்களிடமிருந்து கருத்துகளைப் பெற்றது.

**வெறுப்புக் குற்றங்கள் தடுப்புப் பணிக்குழு உறுப்பினர்கள்:**

தலைவர் : கரேன் மாக்
உறுப்பினர்கள்: மேரி சென், ஜெர்மைன் எலியட், பெர்னி ஃபேர்பர், ராஜா கௌரி, இஜாஸ் கமர், உஸ்மா ஷாகிர், ஹோவர்டு ஷுல்மேன், ஆன்னி-மேரி ஸ்டூவர்ட், ஜேன் தால்லிம்.

**உத்தேசிக்கப்பட்டுள்ள செயல்திட்டம்**

வெறுப்புக் குற்றச் சம்பவங்களுக்கு எதிராகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளிக்கவும் தன்முனைப்பான நடவடிக்கை எடுப்பது, புதிய முயற்சிகள் மற்றும் செயல்திறனை ஊக்குவிப்பதற்காக பணிக்குழு ஒரு செயல்திட்டத்தை முன்வைத்துள்ளது. *குற்றச் சட்டத்தில் (Criminal Code)* அடையாளம் காணப்படும் குற்றங்களை விட விரிவான வெறுப்புக் குற்றங்கள் இந்தச் செயல்திட்டத்தில் உள்ளன. தனிப்பட்ட வெறுப்புக் குற்றச் சம்பவங்கள் மட்டுமின்றி, அவற்றைத் தூண்டுகிற அல்லது தடுக்கிற நடத்தைப்போக்கு, அமைப்பு, ஆகியவற்றையும் இச்செயல்திட்டம் கவனிக்கிறது.

செயல்திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் இலக்குகள் மற்றும் நோக்க அறிக்கைகளை இந்தப் பணிக்குழு சேர்த்துள்ளது; இவற்றை அடைவதற்கான பரிந்துரைகளை செய்துள்ளது. வெறுப்பு மற்றும் வெறுப்புக் குற்றங்களுடன் தொடர்புடைய பரந்துபட்ட துறைகளை இந்தச் செயல்திட்டம் கொண்டுள்ளது; இதில், அபாரிஜினல் மக்களின் தனித்தகுதி, சமூகங்களின் பங்கு, பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பணியாற்றுவோருக்கு கல்வி மற்றும் பயிற்சி அளிப்பது, பாதிக்கப்பட்டோருக்கு சேவை, நீதி அமைப்புக்குள் இயன்ற நிவாரணம் வழங்குவது, பொதுமக்களிடையே விழிப்புணர்வும் புரிதலும் ஏற்படச் செய்வது ஆகியவையும் அடங்கும்.

இந்த ஆவணம் 21 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு விரைவில் இந்த வலைப்பக்கத்தில் கிடைக்கும்: www.attorneygeneral.jus.gov.on.ca

முழு அறிக்கை ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் அமைச்சக வலைதளத்தில் கிடைக்கும்: www.attorneygeneral.jus.gov.on.ca

- 30 -

தொடர்புகள்:
பிரெண்டன் கிராலி
அட்டர்னி ஜெனரல் அமைச்சகம்
தகவல் தொடர்புக் கிளை
*(416) 326-2210*

அந்தோனி பிரவுன்
சமூக பாதுகாப்பு மற்றும் சீரமைப்புச் சேவைகள் அமைச்சகம்
தகவல் தொடர்புக் கிளை
*(416) 314-7772*

www.attorneygeneral.jus.gov.on.ca